# சத்திய வேத பாதுகாவலன்

கத்தோலிக்க வார வெளியீடு

(செய்தித்தாளாகப் பதிவுபெற்றது)

**காவலன்**
**சந்தாதாரரின் கவனத்திற்கு**

| | | | |
|---|---|---|---|
| வருட | சந்தா | ரூபா | 9-00 |
| 6 மாத | ,, | ,, | 4-50 |
| 3 மாத | ,, | ,, | 2-25 |

(தபாற் செலவு உட்பட)

95-ம் புத். | 1970-ம் ஆண்டு சித்திரை மாதம் 4-ந் திகதி சனிக்கிழமை — பிரதிசதம் 15 | 12-ம் இல.


# "அல்லேலூயா! நம் ஆண்டவர் மெய்யாகவே உத்தானமாயினர்"

நம் அன்பின் தெய்வம், கிறீஸ்துவின் பிறப்பு மனிதருக்கு எவ்வாறு மகிழ்ச்சியை ஊட்டியதோ, அவரது வாழ்வு மனிதருக்கு எவ்வாறு முன்மாதிரி காட்டியதோ, அவ்வாறே, கிறீஸ்துவின் மரணம் மனிதருக்கு இரட்சிப்பையும், அவரது உத்தானம் அவர்களுக்கு மகிமையின் அச்சரமான நம்பிக்கையை உண்டாக்கியது. கிறீஸ்துநாதர் தாம் திருவுளம் பற்றியபடி உயிர்த்திராவிட்டால், அப்போஸ்தலர்களின் நிலை என்ன? கிறீஸ்தவர்களின் கதி என்ன? இதனாலேயே நம் மீட்பர் பெத்தானியாவில் லாசருவை உயிர்ப்பித்தபோது, பரி. அரு. 11-ம் அதி. 25-ம்வச. "உத்தானமும் உயிரும் நானே" என்று கூறினார்.

கிறீஸ்துவின் உத்தானம், கிறீஸ்தவ மக்களுக்கு மகிமையின் உயிரளிக்கும், நம்பிக்கையின் வெற்றிச் சின்னம் அல்லவா?

தம்மைத் தாழ்த்தி, தமது பாடுகளால் இம்மகிமையைத் தேடிய நம் இரட்சகர், எவ்வாறு தமது உத்தானத்தை உலகுக்கு அறிவித்தார், யார் யாருக்கு அறிவித்தார், இவ்வுத்தானத்தின் தரிசனையில் பேறு பெற்றோர் யார்? என்பவைகளைப்பற்றி சிறிது ஆராய்வோம்.

வாரத்தின் முதல்நாள் அதிகாலையில், பக்தியுள்ள சில ஸ்திரிகள், பரிமள தைலத்தை ஆயத்தம் செய்து கொண்டு, கல்லறைக்கு வந்தனர். பரி. மாற். 16-ம் அதி. 4-ம் 5-ம் வச. "அங்கு கல்லறையின் வாசற்கல் புரட்டப்பட்டிருக்கிறதைக் கண்டனர். பின்பு அவர்கள் கல்லறைக்குள் பிரவேசித்தபோது, வெள்ளை அங்கி தரித்து, வலது பக்கத்தில் உட்கார்ந்திருந்த, ஒரு வாலனைக் கண்டு திடுக்கிட்டனர். அப்போது அந்தத் தூதன் அவர்களைப் பார்த்து, பரி. மத். 5—7-ம் வச. "நீங்கள் பயப்படவேண்டாம். சிலு

[மறுபக்கம் பார்க்கவும்]

## என்னுல் கூடியது செய்துவிட்டேன்

இரு வாரங்களுக்குமுன் பரிசுத்த தந்தை 6 ஆவது சின்னப்ப பாப்பரசரைச் சந்திக்க சில தென் வியற்னும் பாராளுமன்ற அங்கத்தினர் வத்திக்கானுக்குச் சென்றிருந்தனர். அவர்களுக்கு அளித்த பேட்டியில் பரிசுத்த தந்தை தென் வியட்னமில் சமாதானம் நிலைகொள்ளத் தான் எடுக்காத முயற்சிகள் எதுவுமில்லையெனவும், இன்னும் அங்கு போர் நடந்துகொண்டிருப்பதுபற்றித் தமக்கு ஆழ்ந்த கவலை உண்டென்றும் கூறினர்.

## வறியவர் சேரியில் பரி. தந்தையின் திருப்பலி

பரிசுத்த தந்தை 6 ஆவது சின்னப்ப பாப்பரசர் இவ்வருட உயிர்த்த ஞாயிறுதின அதிகாலைப்பூசையை ரோமாபுரியின் வறியவர் சேரிஒன்றில் ஒப்புக்கொடுத்து ஏழைகளுடன் அத்திருநாளைக் கொண்டாடினர். அதன்பின் 11 மணிப் பூசையைச் சம்பேதுரு மாதேவாலயத்தில் ஒப்புக்கொடுத்து அதன்பின் வழமைப்பிரகாரம் ரோமாபுரிக்கும் அகில உலகத்துக்கும் தமது ஆசியை ஈந்தார்.

## நைஜீரியாவுக்கு மேலும் வெளிநாட்டுக் குருமார் வேண்டும்

நைஜீரியா தேசமேற்றிராணிமார்சபையின் சார்பாக அந்நாட்டுத் தலைநகரமாகிய லாகொஸ்பிரதேச அதிமேற்றிராணியார் அகி அடிகளார் அந்நாட்டுத் தலைவர் யக்கூபு கௌசன் அவர்களுக்கு அண்மையில் அனுப்பியுள்ள விண்ணப்பத்தில் அந்நாட்டின் அபிவிருத்திக்காகவும், தேவதொண்டு தடையின்றி நடைபெறுவதற்காகவும் முன்போல் அந்நியநாட்டுக் குருமார் தொண்டாற்ற அனுமதிக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார். மேலும் அவர் அங்கு நடந்த கலககாலத்தில் குருமார் தேசிய நலனுக்கு எதிராக ஒருபோதும் நடந்துகொள்ளவில்லை என்பதை அழுத்தந்திருத்தமாக எடுத்துக் காட்டியும் இருக்கிறார்.

## கருதினல் சுயென்சுக்கு மேலும் ஒரு பதவி

பெல்ஜியதேச கருதினல் சுயென்ஸ் அடிகளாருக்குப் பரிசுத்த தந்தை 6 ஆவது சின்னப்ப பாப்பரசர் அவருடையவேலைகளுடன் மேலும் ஒரு பதவியை அளித்திருக்கிறார். சர்வதேச மரியாயின் மகாநாடுகளை நடப்பிக்கும் தெரிவுக்குழுவின் தலைவராகவும், தேவதாயாரின் பக்தியையும் வணக்கத்தையும் ஒழுங்குபடுத்தும் தலைவராகவும் அவரை நியமித்திருக்கின்றார். தேவதாயாருக்கு மிதமிஞ்சிய வணக்கத்தைக் கத்தோலிக்கர் செலுத்துகின்றார்களென மிகைபடுத்திக்கூறும் இந்நாட்களில் சிறந்த அறிவாளியும் மறைவல்லுனருமாகிய கருதினல் சுயென்ஸ் அடிகளார் தேவதாயாருக்குரிய வணக்கத்தைச் சிறப்பாக வத்திக்கான் சங்க பிரகடனங்களுக்கிணங்க நடப்பிப்பாரென்பதில் ஐயமில்லை.

## வருங்கால குருமாணவர்

குருமாணவருக்கு வருங்காலத்தில் எத்தகைய பயிற்சி அளிக்கப்படவேண்டுமென்று வத்திக்கானிலிருந்து ஆலோசனை அகில உலகத்துக்கும் அனுப்பப்பட்டிருக்கின்றது. கத்தோலிக்க கல்வி விவகாரக் காரியாலயத்துக்கு வத்திக்கானில் தலைமைவகிக்கும் கருதினல் கரோன் அடிகளார் இந்த ஆலோசனைகள் மிகவும் முக்கியமானவையென்று குறிப்பிட்டிருக்கிறார். குருமார் நல்ல கல்வி அறிவுடையவர்களாக இருப்பது அவசியமாயிருப்பதால் குருவாக விரும்புபவர்கள் குறைந்தபட்சம சர்வகலாசாலைப் பிரவேச வகுப்புத் தராதரம் பெற்றவர்களாயிருக்கவேண்டுமென்றும் சமூக, தனிப்பட்ட பொறுப்புணர்ச்சி உடையவர்களாயிருக்கவேண்டுமென்றும் உலக அறிவு நிறைந்தவர்களாக இருக்கவேண்டுமென்றும் அந்த ஆலோசனைகள் கூறுகின்றன. அகில உலகத்துக்கும் பொதுவாகக் கூறப்பட்ட இப் பல ஆலோசனைகளையும் ஆராய்ந்து பிரதேச மேற்றிராணிமார்கள் தத்தம் பகுதிகளுக்கு உகந்தனவற்றை உடனடியாக அமுல் நடத்தக் கேட்கப்பட்டிருக்கின்றனர்.

## குருமாரின் விரத்தத்துவத்தைப்பற்றி கரு. கிருசியஸ் கூறுவது

அகில இந்திய மேற்றிராணிமார் சபையின் தலைவரும், பம்பாய் பிரதேச அதிமேற்றிராணியாருமாகிய கருதினல் கிருசியாஸ் அடிகள் இந்தியதேச மேற்றிராணிமார்சபையின் சார்பாக பரிசுத்ததந்தை 6-வது சின்னப்பபாப்பரசருக்கு மாசிமாதம் 7-ம் திகதி ஒருகடிதம் அனுப்பியுள்ளார். அக்கடிதத்தில் குருமாரின் விரத்தத்துவம் முன்போல நிலைபெறவேண்டுமென்ற பாப்பரசரின் முடிவுக்குத் தங்கள் முழுஆதரவையும் தெரிவித்திருக்கின்றார்: இதுபற்றி "எக்சாமினர்"என்னும் பம்பாய் மேற்றிராசன கத்தோலிக்க பத்திரிகை நிருபருக்கு கிருசியாஸ் அடிகளார் அளித்த பேட்டியில் கூறியிருப்பதாவது: "2-ம் வத்திக்கான் சங்கத்தின் பின்பும், விசேஷமாய் சென்றவருடம் வத்திக்கானில் நடந்த அகில உலக மேற்றிராணிமாரின் சினொட்டின் பின்பும், மேற்றிராணிமார் தமது மேற்றிராசன பொறுப்புக்களுடன் அகில உலக திருச்சபையின் பொறுப்பையும் பாப்பரசர் தலைமையில் கொண்டுள்ளனர் என்பது வெளிப்படையாய் விட்டது. ஆகவே இந்திய தேச மேற்றிராணிமார் சபையானது உலக திருச்சபை மேற்கொள்ள வேண்டிய குருமார் விரத்தத்துவத்தைப்பற்றிப் பாப்பரசர் கூறியிருப்பதை முழுமனதுடன் ஏற்றுக்கொள்கின்றனர் என்பதை அகில உலகத்துக்கும் வெளியிட விரும்புகின்றது என்றார்.

## ஸ்மித் ஆட்சியின் கொடுமை

தென் அமெரிக்காவில் பிரித்தானிய தொடர்புகள் யாவற்றையும் அகற்றிவிட்டு உலக அபிப்பிராயத்தை அவமதித்து, றொடீசியா தேசம் அண்மையில் பிரசாதிபத்தியமாகத் தம்மைப் பிரகடனம் செய்துகொண்டு அங்குள்ள சிறுபான்மையினரான வெள்ளையர்களின் கையில் நாட்டுப்பொறுப்பைப் பற்றிக்கொண்டது. அந்நாட்டிலே பெரும்பான்மையினரான நிறத்தோலுடைய ஆபிரிக்கர்களை அத்தேச "சிமித்" அரசாங்கம் மனுத்தன்மை யுடையவர்களாக மதிப்பதில்லை. வெள்ளையர்களுக்குத் தொண்டு செய்யப் பிறந்தவர்களாகவே மதித்து வருகின்றது: இந்நிலைமை பிழையானது என்று அங்குள்ள கத்தோலிக்க அதிகாரிகளும் மறு கிறிஸ்தவ சபையினரும் எடுத்துக்காட்டியும் கிடைத்தபலன் இதுவரையும் யாதொன்றுமில்லை. சிமித் அரசாங்கத்தின் அநீதியை அண்மையில் பத்திரிகைகளுக்கு எழுதி அம்பலப்படுத்திய கத்தோலிக்க குருவானவராகிய வணக்கத்துக்குரிய டிராபோர் சுவாமியாரை 24 மணித்தியாலங்களில் நாட்டிலிருந்து வெளியேற அந்த அரசாங்கம் கட்டளையிட்டது.

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வீண்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அல்லேலூயா நம் ஆண்டவர் ........

1-ம் பக். தொடர்ச்சி

வையில் அறையுண்ட யேசுநாதரைத் தேடுகிறீர்கள் என்று அறிவேன். அவர் தாம் திருவுளம்பற்றினபடியே உயிர்த்தெழுந்துவிட்டார். ஆண்டவர் வைக்கப்பட்ட இடத்தை வந்துபாருங்கள்'' என்றார். பின்னும் ஆண்டவருடைய தூதன் நீங்கள் விரைவாகப்போய், அவர் உயிர்த்தெழுந்து விட்டார் என்று அவருடைய சீஷர்களுக்குச் சொல்லுங்கள் என்றார். அவர்களும் ஓடிச் சென்று, நடந்தவற்றையெல்லாம் அறிவித்தார்கள். அப்போது பரி. இராயப்பரும், பரி. அருளப்பரும் ஒட்டமும் நடையுமாகச் சென்று கல்லறையை அணுகி, கல் புரட்டப்பட்டிருப்பதையும், பரிவட்டச்சீலை கழற்றி வைக்கப்பட்டிருப்பதையும் கண்டு விசுவசித்தனர். ஆயின் பயம் நிறைந்தவர்களாய், திரும்பிப்போய் இவைகளைப்பற்றிக் கதைத்துக் கொண்டிருந்தனர்.

ஆனால், மரியமதலேனம்மாளோ, நம் அன்பின் தெய்வத்தை காணாதினாலும், அவர் மேலுள்ள தணியாத அன்பினாலும், கண்ணீர் சொரிந்து அழுதாள். அவளது தவிர்க்க முடியாத அன்பின் அழுகைக்கு நம் அன்பின் மீட்பரே, பதிலளிக்கிறார். பரி. அரு. 20-ம் அதி. 16-ம் வச. ''யேசுநாதர் அவளை நோக்கி, ''மரியாயே'' என்று அழைக்க, அவள், திரும்பிப் பார்த்து, ''இரபோனி'' என்றாள்.

உயிர்த்தெழுந்த நம் இரட்சகர், முந்தமுந்த அவளுக்குத் தரிசனையாகி, அவள்மூலமே தமது அப்போஸ்தலருக்கு அறிவித்தார். பரி. அரு. 20-ம் அதி. 17-ம் வச. ''என்னைத் தொடவேண்டாம். நான் இன்னும் என் பிதாவினிடத்தில் போகவில்லை. ஆனால் நீ என் சகோதாரிடம் போய், உங்கள் பிதாவும் என் பிதாவும், உங்கள் சருவேசுரனும் என் சருவேசுரனுமாகிய வரிடத்தில் ''ஏறிப்போகிறேன் என்று அவர்களுக்குச்சொல்'' என்றார். அவளும் ஆனந்த மிகுதியால் ஓடிச்சென்று அவர்களுக்கு அறிவித்தாள்.

இஃதிவ்வாறாக, இவையெல்லாம், வேதாகமத்தில் கூறப்பட்டபடியே, நடைபெற்றன என்பதை நம் மீட்பர் எம்மாவூர்போன சீஷர்களுக்கு எண்பிக்கச் சித்தமானார். தாம் உயிர்த்தெழுந்த அன்று, அவர்களை வழிப்பயணத்தில் சந்தித்து, அவர்களுடன் தாமும் ஒரு வழிப்போக்கன்போல, உரையாடினார். அவர்கள் இதயங்களில், தமது வரப்பிரசாதம் நிரம்பிய, வார்த்தைகளை ஊற்றி, வேதாகமவசனங்களையும் ஞாபகப்படுத்தி, பரி. லூக். 24-ம் அதி. 25—27-ம். வச. ''ஓ மதியீனரே! தீர்க்கதரிசிகள் வசனித்த யாவற்றையும், விசுவசிப்பதில் மந்தபுத்தியுடையவர்களே, கிறீஸ்துநாதர் இவ்விதமாய்ப் பாடுபடவும், தமது மகிமையில் பிரவேசிக்கவும் வேண்டியதில்லையோ? என்று கூறி, மோயீசன் முதல், சகல தீர்க்கதரிசிகளாலும், தம்மைப்பற்றிச் சொல்லப்பட்ட சகல வேதவாக்கியங்களையும் அவர்களுக்கு விபரித்துக் காண்பித்தார். இவ்வாறு அவரது ஜீவன்தரும் வார்த்தைகளால் போஷிக்கப்பட்ட அவர்கள், மாலை நேரமானபோது, தங்கள் வீட்டை அண்மியதும், அவரை விட்டுப் பிரிய மனமில்லாது, ''அந்திநேரமாயிற்றே; எங்களுடன் வந்து தங்கியிரும்'' என்று வருந்திக் கேட்டனர்.

அப்பால் நடந்த அற்புதச் செயலை சற்று ஆழ்ந்து சிந்திப்போம். பெரிய வியாழக்கிழமை தாம் ஏற்படுத்திய திருவிருந்தை, பெரிய வெள்ளிக்கிழமை தம்மைத்தாமே பலியாக்கிய பலிப்பொருளை, தமது உயிர்ப்பின் மகிமை விருந்தாக, பகிர்ந்தளிக்கச் சித்தம் கொண்டார். தமது மகிமையின் உத்தானத்தால் ஆன்மாக்களில் வசிக்கவே, வந்தேன் என்பதை உறுதிப்படுத்த, அவர்களோடே அவர் பந்தியமர்ந்திருக்கையில், பரி. லூக். 24-ம் அதி. 30-ம், 31-ம் வச. ''அவர் அப்பத்தை எடுத்து ஆசீர்வதித்து, பிட்டு, அவர்களுக்குப் பகிர்ந்தளித்தார். உடனே அவர்கள் கண்கள் திறக்கப்பட்டு, அவரை யேசுநாதர் என்று அறிந்து கொண்டனர். அவரோ அவ்விடத்தில் நின்றும் மறைந்து விட்டார்'' இவ்விஷயம் நமக்கு இரண்டு பிரதான உண்மைகளை விளக்கிக்காட்டுகின்றன. அவையாவன:

1. இறைவாக்கு. 2. திருவிருந்து. இரண்டும் ஒன்று சேரவேண்டும். பரி. லூக். 24-ம் அதி. 32-ம் வச. ''அவர் நம்முடன் பேசி வேதவாக்கியங்களை நமக்குத் தெரிவிக்கும்போது, நம்முடைய இதயம், நமக்குள் பற்றியெரிந்து கொண்டிருந்ததல்லவோ'' எம்மாவூர் சென்ற சீஷர்கள், யேசுநாதர் தம்மைவிட்டு மறைந்தபின் இவ்வாறு தம்முள் கதைத்துக் கொண்டனர். எனவே இறைவாக்கு மக்களை இறைவன் பக்கம் திருப்பி, கிறீஸ்துவின் பாடுகளையும், மரணத்தையும் நினைப்பூட்டி, வரப்பிரசாதத்தால் நிரப்புகிறது. திருவிருந்தோ, கிறீஸ்துவின் மரணத்தையும், கிறீஸ்துவின் உயிர்ப்பையும் விளக்கி மகிமையின் அச்சாரமாக அவரைத்தரிசிக்க வைக்கிறது. இவ்விரு விசுவாச உயிர்நாடிகள் மூலமே நம் திருச்சபை நாளாந்தம் பீடப்பலியை நிறைவேற்றி மக்களை விண்ணரசின் பாதையில் நடத்திச் செல்கின்றது. கிறீஸ்துவுடன் வாழ்ந்து, கிறீஸ்துவின்பாடுகளில் அவரை விட்டுப் பிரிந்த அப்போஸ்தலர், கிறீஸ்துவின் உயிர்ப்பைப்பற்றி அறிந்ததும், பயத்தினால் கதவுகளைப் பூட்டிக்கொண்டு உள்ளேயிருந்து கதைத்தும் கொண்டிருந்தபோது, யேசுநாதர் அவர்கள் நடுவில் தோன்றி, பரி. அரு. 20-ம் அதி. 19-ம் வச. ''உங்களுக்குச் சமாதானம் உண்டாவதாக, நான்தான் பயப்படாதேயுங்கள்'' என்றார். ஆனால், அவர்களோ கலங்கிப் பயந்து, ஒரு பூதத்தைக் காண்பதாக எண்ணினார்கள். யேசுநாதர் அவர்களைத் தேற்றித் தமது காயப்பட்ட கரங்களையும், பாதங்களையும் காட்டி நம்பச் செய்தார். உடனே அவர்கள் பயம் மகிழ்ச்சியாக மாறவே, அவர்களை நோக்கி, பரி. மத். 28-ம் அதி. 18-ம் வச. பரலோகத்திலும், பூலோகத்திலும் எனக்குச் சர்வ அதிகாரமும் கொடுக்கப்பட்டிருக்கிறது. நீங்கள் உலகம் எங்கும் போய் எல்லாருக்கும் நற்செய்தியை அறிவியுங்கள். விசுவசித்து ஞானஸ்நானம் பெறுபவன் இரட்சிக்கப்படுவான். விசுவசியாதவனோ, ஆக்கினைத் தீர்வையிடப்படுவான் என்றும் பரி. அரு. 20-ம் அதி. 23-ம் வச. ''எவர்களுடைய பாவங்களை மன்னிப்பீர்களோ, அவைகள் மன்னிக்கப்படும். எவர்களுடைய பாவங்களை மன்னியாதிருப்பீர்களோ, அவைகள் மன்னிக்கப்படமாட்டா'' என்றும் கூறினார்.

இவ்வுத்தானத்தின் தரிசனை இறைவனை அதிகம் நேசித்த புனிதருக்கே கிடைத்தது. இவர்கள் நம் தேவ அன்னை போல், தமது அளவுகடந்த தேவசிநேகத்தால் விண்ணுலகை முற்றுகையிட்டு, மண்ணுலகில் அவரைத் தரிசிக்கும் பேறுபெறுகின்றனர். இவர்கள் மூலமே, இறைவன் தம்மை, தமது விருப்பை, தமது அன்பை, தமது வல்லமையைக் காலத்துக்குக் காலம் அறியவைக்கிறார்.

— நாதன்

## புதிய பைபிள்

அங்கிளிக்கன் சபையினரும் பிறபுரொட்டஸ்தாந்து மதத்தினரும் சென்ற 23வருடகாலமாகச் செய்துவந்த அரும்பெரும் முயற்சியின் பயனாக சென்றவாரம் பழைய புதிய ஏற்பாடுகள் சகலதுமடங்கிய புதியபைபிள் ஆங்கிலநாட்டில் வெளிவந்திருக்கிறது. வெளிவந்த இந்த வாரமே சகல பிரதிகளும் விற்பனையாகிவிட்டதென்றும் இந்நூலுக்கு மக்கள் காத்திருந்து அதைவாங்கக்காட்டிய விருப்பம் வேறு ஒரு நூலுக்குமில்லையென்றும் அச்சக வட்டாரங்கள் கூறுகின்றன. ''தற்கால பாஷையில் சிறப்பாக எழுதப்பட்ட நூல்களில் இதைப்போல் பிறிதொன்றில்லை'' எனப் பிரபல்யமிக்க யேசுசபைக் குருவானவர் ஜோண் மக்கென்சி கூறியிருக்கிறார்.

## புனித ஆசீர்வாதப்பர் சபைத் தலைவருக்கு கண்டியில் பிரியாவிடை

புனித ஆசீர்வாதப்பர் சபைத் துறவிகளின் தலைவர் டொம் பயஸ் பெட்றிச்சி அடிகளார் எமது நாட்டில் ஒரு மாதகாலமாகத்தங்கி தமது துறவிகள் தொண்டாற்றிவரும் ஒவ்வொரு பங்குக்கும் விஜயம் செய்து அவர்களது சேவையின் தன்மையையும் குறைநிறைகளையும் அறிந்து கொண்டு இதேபிரகாரம் இந்தியாவிலுள்ள துறவிகளையும் தரிசிப்பதற்காக பங்குனி 6ஆம் திகதி எமது நாட்டை விட்டுப் பிரியலானார். அவர் பயணமாவதற்குமுன் கண்டி மேற்றிராசன கத்தோலிக்கர் அவருக்கு உருக்கமான ஒரு பிரியாவிடை அளித்தனர்.

''எனக்கு அறிமுகமானவர்கள், என்னை அன்போடு நேசித்தவர்கள் அனைவரதும் செபங்கள் இத்தருணம் எனக்குத் தேவை''

— புனித எப்ரேம்

## நினைவு கூருவோம்

மணற்காடு
**அந்தோனி லீனப்பு**
அவர்களின்
**1-ம் ஆண்டு மரணஞாபகம்**

இறப்பு: 23-3-69

சுவாமி! பாதாளத்திலே நின்று உம்மைக் கூப்பிடுகிறேன். என் சத்தத்தைக் கேட்டருளும்.

எனது அன்புமிக்க பத்தாவும், எங்கள் அருமைத் தந்தையுமான அந்தோனி லீனப்பு இம்மண்ணுலகைநீத்த முதலாம் வருடம் சென்ற 23-ந்தேதி பூர்த்தியாகியது. அன்று இவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக மணற்காடு அர்ச். அந்தோனியார் ஆலயத்தில் திக்கப்பாடற்பூசை நிறைவேறியது. இதைக் கண்ணுறும் கிறீஸ்தவர்கள் இவரின் ஆன்ம சாந்திக்காக வேண்டிக்கொள்ளுமாறுகேட்டுக் கொள்ளுகிறோம்.

இவரின்பிரிவால் துயருறும்
மனைவி: லீனப்பு சலேற்றம்மா
பிள்ளைகள்: லீ. நீக்கிலாப்பிள்ளை, லீ. மேரிமோணிக்கா, லீ. மேரி பிலோமினா, லீ. மேரி லொறேற்றா, லீ. அன்ரன் எடின்பறோ, லீ. யே. மேரி பற்றிமா, லீ. அன்ரன் சேவியர், லீ மரிய கொறற்றி, லீ. மரிய கிதபொன்கலன், லீ மரியகிரா. மருமக்கள்: ச. மிக்சேற்பிள்ளை, நீ. அன்னமேரி. 39-70

●

**திருமதி சூசானுஸ்பிள்ளை சூசைப்பிள்ளை**
அவர்களின்
**50-ம் வருட மரணஞாபகம்**

தோற்றம்: 28—2—1890 மறைவு: 5—4—1920

இம்மாதம் 6-ந்தேதி திங்கட்கிழமை காலை 6-30 மணிக்கு நாளுட்டான் ஆரோக்கியமாதா ஆலயத்தில் ஒரு திக்கப்பாடற்பூசை ஒப்புக்கொடுக்கப்படும்.

சூ. ப தொம்மானுபிள்ளை.
19 Macleod Road,
Colombo 4
40-70

●

**மறைந்த ஆசிரியர் திரு. அந்தோனிப்பிள்ளை**

சமீபத்தில் பாலைதீவு படகு விபத்தில் அகால மரணமடைந்தவர்களுள் முல்லைத்தீவு மகா வித்தியாலயத்தில் கடமையாற்றிய ஆசிரியர் திரு. அந்தோனிப்பிள்ளையும் ஒருவராவர். இவர் யாழ்ப்பாணம், சில்லாலை வாசியாவர். இவரின் இழப்பு ஆசிரிய உலகத்திற்கு அதிர்ச்சியைத் தருவதாகும். இவரை இழந்து பரதவிக்கும் குடும்பத்தாருக்கு தங்கள் அஞ்சலியையும், மனமார்ந்த உதவியையும் இயன்றளவு செலுத்துவது வடபகுதியிலுள்ள ஆசிரிய சங்கங்களினதும் அவைகளின் உறுப்பினர்களினதும் கடமையாகும். உரியகாலத்தில் இப்பணியைச் செய்யவேண்டும் என்பதே எமது ஆவல்.

லாசரஸ் குணநாயகம்

காவலனுக்கு கதைகள், கவிதைகள், கட்டுரைகள் அனுப்பவேண்டிய விலாசம்:

ஆசிரியர். 'காவலன்',
மேற்றிராசன இல்லம்,
த. பெ. எண் 2,
யாழ்ப்பாணம்.

**R. யேசுதாசன் சிவப்பிரகாசம்**
(C. G. R. — F. P. L.) அவர்கள்
பரமபதமடைந்த
**10ஆம் ஆண்டு நிறைவு தினம்**
**29-3-70.**

மறைந்தனை அன்பே ஆண்டு
பத்து — ஆனால்
மலர்வதனம் மதரமொழி
சிரிப்பின் சிறப்பு
நெஞ்சத்தை நீருக்க நிலைகுலைந்து
நிற்கின்றோம்
மறுமுறையும் ஒருதடவை
மதிமுகத்தைக் காண்போமோ
மகிமையில் நீர் சாந்திபெற
மாபரனர் அருள்புரிக.

சென்ற 31-3-70 செவ்வாய் தினம் இவரின் ஆன்மசாந்திக்காக சூராவத்தை புனித தெரேசம்மாள் ஆலயத்தில் திவ்விய பூசைப்பலி நிறைவேறியது. எனவே இதைக்கண்ணுறும் அனைவரும் இவரின் ஆன்மஇளைப்பாற்றிக்காக வேண்டிக் கொள்ளுமாறு தயவாகக் கேட்கின்றோம்.

திருமதி திரேசா
யேசுதாசனும், இனசனரும்
திரேசாவாசம்,
சூராவத்தை.
36-70

●

நெடுந்தீவு மத்தியைச்சேர்ந்த
**ஸ்ரீமான் வயித்தியான் மரியாம்பிள்ளை**
அவர்களின்
**தேகவியோகத்தைக் குறித்த 1-ம் வருட ஞாபகம்.**

விருத்தம்

அருமையுடன் எமைப்பேணி
வளர்த்த ஐயா!
ஆண்டொன்று சென்றாலும்
உந்தன் சோதி
உருவமதும் நற்செயலும்
ஊற்றுப்போல
ஊறிவரும் அமுதமொழி
வாக்கும் எந்தத்
தருணமதும் நாம்மறக்க
முடியுமோகாண்
தழல்வீழ்ந்த தளிர்போல
வாடுகின்றோம்
கருணையுரு வானவெங்கள்
கர்த்தன்பாதக்
கமலமதில் இளைப்பாற
வேண்டினோமே.

''சீவியத்தில் இவரை நேசித்தவர்களே, மரணத்திலும் மறவாதீர்கள்.''

இவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக 10-4-70 வெள்ளிக்கிழமை காலை நெடுந்தீவு பரி. யுவானியார் ஆலயத்தில் திக்கப்பாடற் பூசை நிறைவேறும்.

இதனைக் கண்ணுறும் அன்பர்கள் அவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக வேண்டுமாறு பணிவுடன் கேட்கின்றோம்.

பிரிவால் துயருறும்,
பிரிய மனைவியும், பிள்ளைகளும்.
நெடுந்தீவு.
37-70

## நன்றியறிந்த

திருஇருதயநாதரின் இரக்கத்தினாலும், புனித யூதாததேயுவின் மன்றாட்டினாலும் நான் இரந்துகேட்ட கருமம் அனுகூலமாயிற்று. நேர்த்திப்படி பிரசுரிக்கிறேன்.

ஓர் அடியாள்
ஓடக்கரைரோட்,
யாழ்ப்பாணம். 41-70

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரிமத்தியாவின் சூசையப்பர்

— ஞானம்


வேதாகமத்திலே பழைய ஏற்பாட்டிலும், புதிய ஏற்பாட்டிலும் சூசையப்பர் (யோசேப்பு) எனும் நாமந் தாங்கிய மூவர் சிறப்பாக இடம்பெறுகின்றனர். இவர்களில்,

முதலாவதாக இடம்பெறுகிறவர்—எகிப்தியபார்வோன் அரசன்கண்ட இரு கனவுகளுக்கும் தேவஞானத்தோடு பலன்சொல்லியபோது, அவனால் எகிப்துமுழுவதுக்கும் அதிகாரியாக நியமனம் பெற்று முன்வந்த ஏழு வருடச் செழிப்பான காலத்தில் ஏராளமான தானியங்களைச் சேகரித்துவைத்து, பின்வந்த ஏழுவருடப் பஞ்ச காலத்திலே எகிப்திய மக்களுக்கும், தமது சகோதாருக்குத்தானும் தானியங்களை வாரியள்ளிக்கொடுத்து அவர்களைப் பசிபட்டினியிலிருந்து பாதுகாத்துவைத்து அனைவரதும் பாராட்டைப் பெற்ற பிதாப்பிதாவாகிய யாக்கோபின் குமாரனுன சூசையப்பர்.

இரண்டாவதாக இடம் பெறுகிறவர் — மன்னுயிரை மீட்க மனுமகனுக அவதரித்த தேவசுதனுன யேசுவின் திருக்கைத்தாதையாகவும், அவருடைய திருத்தாயாரான பரிசுத்த கன்னிமரியாயின் விரத்தபத்தாவாகவும் மனோவாக்குக்கெட்டாத தேவபராமரிப்பால் தெரிந்துகொள்ளப் பட்டவரும், திருக்குடும்பத்தின் தலைவரும், திருச்சபையின் பாதுகாவலரும் மற்ருெரு யாக்கோபின் குமாரனுமான புனித சூசையப்பர். இவர் முதலாவது சூசையப்பரைப்போல் பூலோக களஞ்சியங்களிலிருந்து தானியங்களை அல்ல, ஆனுல் பரலோக களஞ்சியங்களிலிருந்து தேவவரப்பிரசாத பொக்கிஷங்களை வாரியள்ளி வழங்கும்படியாய் "தமது வீட்டின் ஆண்டவனுக"வும், "சகலமான சம்பத்துக்களுக்கும் தலைவனுக" வும் இருக்க வரம்பெற்றிருக்கிருர்.

மூன்ருவதாக இடம்பெறுகிறவர்— நமது ஆண்டவருடைய திருப்பாடுகளின் புனிதமான நாடகத்தின் கடைசிப் பாகத்தில் திடீரென ஒருகதாபாத்திரமாகக் காட்சியளித்து அதைத் திறம்பட நடித்தவர் இவர் பின்முன் பாராமல் அஞ்சாநெஞ்சுடன் பிலாத்துவிடம் சென்ருர். மாணித்த யேசுவின் திருச்சரீரத்தை அவனிடம் கேட்டுப் பெற்றுக்கொண்டார். அதைச் சிலுவையிலிருந்து இறக்கி அவருடைய திருத்தாயாரின் காங்களில் ஒப்படைத்தார். பின்னர் அதனை ஆசாரத்துடன் பூச்சியமாக அடக்கம் பண்ணினுர். இவர்தான் அரிமத்தியாவின் சூசையப்பர். இவர்நடித்த பாகத்தைச் சுவிசேஷகர் நால்வரும் சுருக்கமாகப் பின்வருமாறு எடுத்துக்கூறியிருக்கின்றனர்.

புனித மத்தேயு—"சாயங்காலமானபோது, அரிமத்தியா ஊரானும், ஐசுவரியவானுமாகிய யோசேப்பென்னும் பேருள்ள ஒருமனுஷன் வந்தார். இவரும் யேசுநாதருக்குச் சீஷனுயிருந்தவர். இவர் பிலாத்துவினிடத்தில் போய், யேசுநாதருடைய சரீரத்தைக் கேட்டார். அப்பொழுது சரீரத்தைக் கொடுக்கும்படி பிலாத்து கட்டளையிட்டான். ஆதலால்யோசேப்பென்பவர் அந்தச் சரீரத்தை யெடுத்து, அதைத் தூயபரிவட்டத்தினுல் சுற்றி, தான் கற்பாறையிலே வெட்டியிருந்த புதிதான கல்லறையில் அதை அடக்கஞ்செய்து, கல்லறை வாசலிலே ஒருபெருங்கல்லைப் புரட்டிவைத்துப் போனுர்." 28 : 57—61.



புனிதமாற்கு— "ஓய்வு நாளுக்கு முந்தினநாள் ஆயத்தநாளாய் இருந்தபடியினுலே சாயங்காலமானபோது, உயர்குல ஆலோசனைக்காரரும், சர்வேசுரனுடைய இராச்சியத்துக்கு எதிர்பார்த்திருந்தவருமாகிய அரிமத்தியாவூர் யோசேப்பென்பவர்வந்து, பிலாத்துவினிடத்தில் துணிந்து போய், யேசுநாதருடைய சரீரத்தைக் கேட்டார். அவர் இத்தனை சீக்கிரத்தில் மரித்திருப்பாரோவென்று பிலாத்து ஆச்சரியப்பட்டு, செந்தூரியனை வரவழைத்து, அவர் இத்தனை சீக்கிரத்தில் மரித்தாரோவென்று அவனைக் கேட்டான். செந்தூரியன்வழியாக அதை அறிந்துகொண்டபின், சரீரத்தை யோசேப்பென்பவருக்குக் கொடுத்தான். யோசேப்பென்பவர் ஒரு பரிவட்டச்சீலையை விலைக்குவாங்கி, அவரை (சிலுவையிலிருந்து) இறக்கி, பரிவட்டச்சீலையால்சுற்றிக் கற்பாறையில் வெட்டப்பட்டிருந்த கல்லறையில் அவரை வைத்து, கல்லறைவாசலில் ஒருபடலக் கல்லைப் புரட்டிவைத்தார்." 16 : 42—47.

புனித லூக்காஸ் — "அப்பொழுது யோசேப்பு என்னும் ஒருவரிருந்தார். இவர் சங்கத்தைச் சேர்ந்தவரும், நல்லவரும், நீதிமானுமாயிருந்தார். இவர் யூதர்களுடைய ஆலோசனைக்கும், செய்கைகளுக்கும் உடன்பட்டவரல்ல. யூதேயாவின் ஒருபட்டணமாகிய அரிமத்தியாவிலிருந்து வந்தவரும், சர்வேசுரனுடைய இராச்சியத்துக்கு எதிர்பார்த்திருந்தவருமாகிய இவர் பிலாத்துவினிடத்தில் போய், யேசுநாதருடைய சரீரத்தைக் கேட்டு, அதை இறக்கிப் பரிவட்டத்தினுல் சுற்றிப் பாறையில் வெட்டப்பட்டதும், அதுவரையில் ஒருவனும் சேமிக்கப்படாததுமான ஒரு கல்லறையில் அவரைச் சேமித்தார்..." 23 : 50—53

புனிதஅருளப்பர்—"இவைகளுக்குப்பின்பு அரிமத்தியா ஊரானுகிய யோசேப்புஎன்பவர் (யூதர்களுக்குப் பயந்ததினிமித்தம் இரகசியத்திலென்ருலும் யேசுநாதருக்குச் சீஷனுய் இருந்ததினுலே) பிலாத்துவினிடத்தில் போய், யேசுநாதருடைய சரீரத்தை இறக்கும்படி கேட்டார். பிலாத்து அவருக்கு உத்தரவு கொடுக்கவே, அவர்வந்து யேசுநாதருடைய சரீரத்தை இறக்கினுர். அப்பொழுது முன்னெருநாள் இரவிலே யேசுநாதரிடத்தில் வந்தவராகிய நீக்கோதேம் என்பவர் வெள்ளைப் போளமும், கரியப் போளமும் கலந்து ஏறக்குறைய நூறு ருத்தல் கொண்டுவந்தார். ஆகையால், அவர்கள் யேசுநாதருடைய சரீரத்தைஎடுத்து யூகர் அடக்கம்பண்ணும் முறையின்படியே அதை பரிமள வர்க்கங்களோடு பரிவட்டச் சீலையினுலே சுற்றிக் கட்டினுர்கள். அவர் சிலுவை மரத்திலே அறையுண்ட இடத்தில் ஒரு தோட்டமும், அந்தத் தோட்டத்தில் இன்னும் எவனும் அடக்கம் பண்ணப்படாத ஒரு புதுக்கல்லறையும் இருந்தது. அந்தக் கல்லறை சமீபமாயிருந்தபடியினுலே, யூதர்களுடைய ஆயத்தநாளினிமித்தம் யேசுநாதரை அதிலே அடக்கம்பண்ணினுர்கள்." 20 : 38—42.

இற்றைக்கு 2000 ஆண்டுகளுக்குமுன் திருமறைச் சரித்திரத்தில் இடம்பெற்றுத் தமது கதாபாத்திரத்தை இனிதே நடித்தபின் இவர் மறைந்துபோயினுர். ஆயினும் திருப்பாடுகளின் நாடகத்திலே இவரின் நாமமும், நடித்த பாகமும் காலமுள்ளவரை கிறிஸ்தஉலகின் ஞாபகத்தில் இருந்தே வரும்.

வருடத்தின் பெரும்பான்மையான காலத்தில் கிறிஸ்தவர்களின் மனத்திரையில் மறைந்திருக்கும்இந்தயூதகுல மகன் திருப்பாடுகளின் நாடகத்தில் நடித்தமையாலே கிறிஸ்த உலகம் முழுவதும் நினைவு கூரப்படுகின்ருர். ஆனுல், இங்கிலாந்திலே இவர் கிறிஸ்தவர்களின் இதயங்களில் சிறப்பான ஓரிடத்தை வகிக்கின்ருர்.

"கிறிஸ்துநாதர் சிலுவையில் தொங்கியபோது, அவருடையதிருக்காயங்களிலிருந்து துளியாகச்சிந்திய திருஇரத்தத்தில் கொஞ்சமும், கடைசி இராப்போசனத்தில் எஞ்சியிருந்த திராட்சை இரசத்தில் கொஞ்சமும் தம்முடன் எடுத்துக்கொண்டு மறைமுகமான ஒரு மாக்கலத்திலே இங்குள்ள கிளாஸ்ரன்பறி எனும்இடம் வந்துசேர்ந்தார்"என்று அங்கே பாரம்பரியமாகக் கூறப்படுகிறது. இன்னும் லோஞ்சினவ்என்ற ரோமைப் போர்வீரன் கிறிஸ்துநாதரின் திருவிலாவைக் குத்தித்திறந்த ஈட்டியையும் இவர் தம்முடன் அங்கு கொண்டுசென்ருர்.

அரிமத்தியாவின் சூசையப்பர் கிளாஸ்ரபறிஎன்ற புனித தீவில் அடக்கஞ் செய்யப்பட்டிருக்கின்ருர். அதுகாரணமாக அக்காலமுதல் அது கத்தோலிக்கரின் திருயாத்திரைத்தலமாக இருந்துவருகிறது. ஆனுல் கிறிஸ்த ஐக்கிய இயக்கம்எழுந்துள்ள இக்காலத்திலே இந்த யாத்திரையில் ஏனைய சபைகளைச்சேர்ந்த கிறீஸ்தவர்களும் கலந்து கொள்ளுகிருர்கள்.



## உயிர்த்தெழுந்தாரே

செ. மொத்தம் போல்

உருவிலா னுருவா யுலகினி லொளியா
யொருதிரி சுடரொளி யாகிக்
கருவிலாக் கருவாய்க் கன்னிகைச் சேயாய்க்
கடுபழி சுமந்திடத் துணிந்தாய்
குருசினில் நிறைவாய்க் கொலைபடப் பணிவாய்க்
கொடியவர் கைதொட விட்டாய்
திருமறை துலங்கத் திகழுரை விளங்கத்
திரிதினத் தாலுயிர்த் தாயே

❊

கல்லறை யதிரக் காவலர் தியங்கக்
கதிரொளிர்ச் சுடரெழுந் திலங்க
வல்லவன் மொழிந்த மணியுரை நிறைந்த
வசனமுஞ் சத்திய மாக
நல்லவ ருணர்ந்த நாதனு மெழும்ப
நரர்களி னிறப்பினுக் குயிர்ப்பு
சொல்லவ ரெழுந்தார் தூயவர் பணிந்தார்
சுயபர னுயிர்த்தெழுந் தாரே

❊

விண்ணவர் அரசர் மண்ணவர் குரவர்
வெல்லையிற் பிறந்திறந் திருக்க
அண்ணலர் காவல் அழுத்திய கல்லில்
அரசிடு முத்திரைக் காவல்
எண்ணலர் சமூகம் இயம்பிய சொல்லை
இசைவுறக் குறிப்பதுங் கடனே
கண்ணவர் கன்னிக் கருவிலா உருவான்
கவினெளிர் உயிர்ப்பதும் பெரிதே

❊

அண்டமும் புவியும் அனைத்தினுக் கிறைவன்
அன்பினுக் கிலக்கண மாக
மண்டல மறிய மலைமிசை மாண்டு
மனிதரின் முடிபினைக் கண்டு
அண்டரும் நடுங்க அதிர்குகை யடங்க
அருவொளி யெழுந்தது முயிர்ப்பு
கண்டவர் விழுந்தார் கன்னியர் எழுந்தார்
கத்தனை நினைத்தவர் உயிர்த்தார்

❊

இறப்பது முறக்க மெழுவது முயிர்ப்பாம்
எனத்தின முணர்வது முண்மை
சிறப்பது மலர்ச்சி சிந்தனை அயர்ச்சி
செய்வதும் பவவழி முயற்சி
துறப்பதும் அருட்சி தொடர்வதும் மருட்சி
துயரினை நினைப்பது முயர்ச்சி
மறப்பது பவத்தை மறுமையுள் மகிழ
மனுமக னுயிர்த்தெழுந் தாரே

## திரும்பிவராதவை :

❁ வாயிலிருந்து வெளியேறிய சொல்
❁ விலலிலிருந்து விடுபட்ட அம்பு
❁ கடந்துபோன வாழ்க்கை
❁ தவறவிட்ட வாய்ப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# வாழ்வளித்த ஜிம்மி

—வேந்து

ரமணி பந்து விளையாடிவிட்டு வீடு திரும்பிக்கொண்டிருந்தான். அப்போது எதிரே சில சிறுவர்கள் கூச்சல்போட்டவண்ணம் எதையோ கல்லால் எறிந்துகொண்டிருந்தனர். ரமணி அவ்விடத்திற்கு ஓடிச்சென்று பார்த்தான். அங்கே அவன் கண்டகாட்சி அவன் உள்ளத்தை உருக்குவதாயிருந்தது.

பிறந்து சில நாட்களேயான ஒரு சிறு நாய்க்குட்டியை அந்தச் சிறுவர்கள் கல்லால் எறிந்து துன்புறுத்திக்கொண்டிருந்தனர். வேதனை தாங்க மாட்டாமல் அந்த நாய்க்குட்டி கதறிய கதறல் ரமணியின் உள்ளத்தைப் பிழிந்தெடுத்தது.

இளகிய மனம் படைத்த ரமணி, நாய்க்குட்டியைத் துஷ்டர்களிடமிருந்து காப்பாற்றவெண்ணி அவர்களை அங்கிருந்து துரத்திவிட்டு நாய்க்குட்டியை அன்போடு கையிலெடுத்தான். கல்லெறியால் ஏற்பட்ட காயங்களிலிருந்து



வழிந்துகொண்டிருந்த இரத்தத்தைத் தன்னுடைய கைக்குட்டையால் துடைத்தான். அந்த நாய்க்குட்டி சாகவிருந்த தன்னை அன்போடு காப்பாற்றிய ரமணியை நன்றியறிதலுடன் ஏறிட்டு நோக்கியது. ரமணி நாய்க்குட்டியுடன் வீட்டிற்குப் புறப்பட்டான்.

* * *

"டேய் ரமணி சொன்னால் கேளடா. நாய் வளர்க்கிறேன் என்று கூறிப் படிக்காமல் காலத்தை வீணாக்கிடாதே."

"இல்லை அப்பா! அப்படியெல்லாம் செய்யமாட்டேன்"

"எனக்கென்னமோ உன் செய்கை ஒன்றும் பிடிக்கவில்லை. பேசாமல் நாய்க்குட்டியை வெளியே அனுப்பி விடு. நமக்கு அந்தத் தொல்லையெல்லாம் வேண்டாம்."

"அப்பா! உங்களுக்கு அந்தக் கவலை வேண்டாம். நான் நாயுடன் விளையாடும் நேரம் தவிர மற்ற நேரங்களில் நன்றாய்ப்படித்து இந்த வருடம் பரீட்சையில் தேறிவிடுவேன்."

"சரி நீ உன் இஷ்டம்போல் செய்; ஆனால் பரீட்சையில் மட்டும் தேறிவிடு."

ஒரேமகனின் பிடிவாதத்தை மறுக்க மாட்டாமல் கடைசியில் ரமணியின் தந்தை நாய் வளர்க்க அனுமதித்து விட்டார். ரமணிக்கு ஆனந்தம் தாங்கமுடியவில்லை. அவனுடைய நாய் வளர்க்கவேண்டும் என்ற நெடுநாளைய ஆசை இன்று பூர்த்தியாகியது.

* * *

ஆறு மாதங்கள் கடந்தன. அந்த நாய்க்குட்டி 'ஜிம்மி' என்ற பெயரில் இப்போது நன்றாக வளர்ந்திருந்தது. ரமணி அதற்கு எல்லா வித்தைகளையும் கற்றுக்கொடுத்திருந்தான். ஜிம்மியும் வெகு ஆர்வத்துடன் அவைகளை விரைவில் கற்றுக்கொண்டது.

ஆண்டுத்தேர்வுக்கு ஒரு வாரத்துக்கு முன்புதான் ரமணி புத்தகத்தைக் கையிலெடுத்தான். விழுந்து விழுந்து படித்தான். ஜிம்மியிலேயே காலத்தைக்கழித்த அவன் உள்ளத்தில் பள்ளிப் பாடங்கள் ஒன்றும் பதிவதாகவில்லை. கடைசியில் அவன் தந்தை எதிர்பார்த்த முடிவே ஏற்பட்டது.

ஆம்! ரமணி பரீட்சையில் தோற்றுவிட்டான். இதை அறிந்த அவன் தந்தை அன்று பிரம்புக்குச் சரியான வேலை கொடுத்தார். என்றுமே ரமணியை அடித்தறியாத அவர் அன்று அரக்கத்தனமாக அடித்துவிட்டார். அவர் ஆத்திரம் ரமணியின் தோல்விக்குக் காரணமாயிருந்த ஜிம்மியையும் தாக்கியது. ஆம்! ஜிம்மிக்கும் கதறக் கதறக் கடுமையாய் அடித்தார். அடித்து ஓய்ந்துபோன அவர் பிரம்பை எறிந்துவிட்டு வெளியேறினார்.

ரமணி வீட்டைவிட்டுவெளியேறி கடற்கரையை நோக்கி நடந்தான். தாயில்லாத அவனை இவ்வளவுநாளும் தாயும் தந்தையுமாயிருந்து வளர்த்த அவன் தந்தை இன்று அவனிடம் சிறிதும் அன்பின்றி நடந்துகொண்டதை எண்ணும்போது ரமணிக்கு அவன் தந்தையின் முகத்தில் விழிக்கவோ அந்த வீட்டில் இருக்கவோ விருப்பமில்லை.

தனக்குத் தெரியாமல் தன்னைத் தொடர்ந்துவரும் ஜிம்மியைப் பார்க்காமல் தற்கொலை செய்துகொள்ள எண்ணிப் பொங்கிஎழும் அலைகளினூடே பாய்ந்தான ரமணி. அவன் பின்னால் வந்துகொண்டிருந்த ஜிம்மி இதைக் கண்டதும் ரமணியைக் காப்பாற்ற எண்ணிக் கடலில் பாய்ந்தது. அலைகள் ரமணியை அடித்துக் கொண்டு சென்றன. ஜிம்மியும் வேகமாக நீந்தி ரமணியை நெருங்கியது. பிரம்படிபட்டதால் ஏற்பட்ட காயங்களின் வலியைச் சிறிதும் பொருட்படுத்தாமல ரமணியைக் கரை சேர்ப்பதையே குறியாகக் கொண்ட ஜிம்மி அவனுடைய சட்டையைக் கெட்டியாகக் கௌவிக்கொண்டு கரையை நோக்கி வேகமாக நீந்தியது.

ரமணி நினைவற்றுக் கிடந்தான். எதிர்த்துவரும் அலைகளுடன் போராடியதால் ஜிம்மி மிகவும் சோர்வடைந்துவிட்டது. மிகுந்த கஷ்டத்துடன் ரமணியைக் கரைசேர்த்த ஜிம்மி கரையை அடைந்ததும் துவண்டு விழுந்தது.

அங்கு பெரும் கூட்டம் கூடியது. ரமணிக்கு முதலுதவி அளித்தவர்கள் ஜிம்மிக்கு அளிக்க மறந்துவிட்டனர். விஷயமறிந்த ரமணியின் தந்தை ஓடிவந்தார். வாயிலும் வயிற்றிலும் அடித்துக்கொண்டு கதறினார். சிறிதுநேரம் கடந்தது. ரமணி கண் திறந்தான். ஜிம்மியைத் தேடினான். உயிர் இழந்துகிடந்த ஜிம்மியைக் கண்ட ரமணி உரக்கக் கத்தினான். "ஜிம்மி அன்று நான் உன் உயிரைக் காப்பாற்றினேன்; அதற்குப்பதிலாக இன்று உன் உயிரையே தியாகம்செய்து சாகவிருந்த எனக்கு வாழ்வளித்துவிட்டாய்" என்று கதறினான். அவர் தந்தை சமாதானப்படுத்தினார். சாதாரண மனிதர்களிடம்கூடக் காணமுடியாத ஓர் உயர்ந்த பண்பைக் காட்டியுள்ள அந்த நன்றியுள்ள மிருகத்தை ரமணியால் என்றுமே மறக்கமுடியாது.

# வீரமா முனிவர்

( மோ. தார்சீசியஸ் )

இத்தாலி நாட்டில் பிறந்தவராம்
இந்திய மண்ணில் வாழ்ந்தவராம்
சமயத் தொண்டு புரிந்தவராம்
சதுரக ராதியைத் தந்தவராம்


யேசுசபைக் குரு முனியாகி
யேசுவின் ஊழியம் பலபுரிந்து
அமுதின் இனிய தமிழுண்டு
அயராது புரிந்தார் தமிழ்த்தொண்டு

தேன்சுவைப் பாக்களால் தேம்பாவணி
தேடரு மருந்தாய் தந்தாராம்
வியந்திடவே தமிழ் வாழ்க்கை கண்டு
வீரமா முனிவர் ஆனாராம்.

இன்சுவைத் தமிழ்மொழி வளர்ந்திடவே
இலக்கண நூல்களை அமைத்தாராம்.
உரைநடை இலக்கியம் பலபடைத்து
உயர்ந்த நற்சேவைகள் அளித்தவராம்.

சிந்தனைக்கு :

மனிதனுக்கு இலட்சணங்கள் [illegible] இலட்சியங்களே தேவை.




அருமைச் சகோதரங்களே,

பரிசுத்தவாரத் திருச்சடங்குகளில் நீங்கள் பக்தியாய்ப் பங்கெடுத்துப் பலனடைந்திருப்பீர்களென்று நம்புகிறேன்; கர்த்தரின் உத்தானத் திருநாட்சோபனம் உங்கள் எல்லோருக்கும் கூறுகின்றேன்.

உங்கள் பாடசாலை விடுமுறைநாட்களை எப்படிக் கழிக்கப்போகிறீர்கள்? நாளாந்த செபங்களை – காலை மாலைச்செபம், சாப்பிடு முன்னும் பின்னும் செபம்— நினைவுடன் செபியுங்கள். குடும்பசெபமாலையை அனுசரியுங்கள். நன்றாய்ச் செபித்ததினாலேதான் அர்ச்சியசிட்டர்கள் மோட்சமடைந்தார்கள் என்பதை ஞாபகத்தில் வையுங்கள். தேவதிரவிய அனுமானங்களும் திருப்பலிப் பூசையும் இடம்பெறவேண்டும்.

நல்லதோழர்களைத் தெரிந்து உறவுகொள்ளுங்கள். அநேக இளம்வீரர் விடுமுறைகாலத்தில் கெட்டுப் போவதற்குத் தூட்டதோழரே காரணம்.

உங்கள் விளையாட்டிற்கும் பொழுதுபோக்கிற்கும் தகுதியான இடங்கள் எவையென்று யோசிக்கிறீர்களா? சோம்பேறிப் பிசாசின் பட்டடை என்பதை மறவாது உங்கள் நேரத்தை உபயோகமான வேலையிற் கழியுங்கள்.

— அண்ணா

## எண்ணிக்கைத் தொகுப்பு

ஒன்று — இறைவன் ஒன்று.
இரண்டு — யேசுவின் சுபாவம் இரண்டு.
மூன்று — தேவ ஆட்கள் மூன்று.
நான்கு — நற்செய்தி நூல்கள் நான்கு.
ஐந்து — யேசுவின் காயங்கள் ஐந்து.
ஆறு — திருச்சபைக் கட்டளைகள் ஆறு.
ஏழு — திருவருட்சாதனங்கள் ஏழு.
எட்டு — பேறுகள் எட்டு (மலைப்பொழிவு).
ஒன்பது — சம்மனசுக்கள் கூட்டம் ஒன்பது.
பத்து — தேவனின் கற்பனைகள் பத்து.
பதினொன்று— இராப்போசனம் உண்ட சீடர் பதினொன்று.
பன்னிரண்டு — யேசுவின் அப்போஸ்தலர் பன்னிரண்டு.
பதிமூன்று — அந்தோனியாரின் மன்றுட்டுகள் பதிமூன்று.
பதினான்கு — சின்னப்பரின் நிருபங்கள் பதினான்கு.
பதினைந்து — சிலுவைப்பாதை ஸ்தலங்கள் பதினைந்து:
(உயிர்ப்புவரை)
பதினாறு — மாற்கு நற்செய்தியில் அதிகாரங்கள் பதினாறு:

சு. மரிய தெரஸா — வால்பாறை

## பொழுது போக்கு

இன்ஸ்பெக்டர்: உலகம் உருண்டை என்பதற்கு மூன்று உதாரணங்கள் கொடு.

ஒருபையன்: ஒன்று என் புத்தகத்தில் அப்படி போட்டிருக்கிறது. இரண்டாவது எங்கள் வாத்தியாயரும் அப்படியே சொல்கிறார். மூன்றாவது நானும் அப்படியே நம்புகிறேன்.

* * *

இன்ஸ்பெக்டர்: (வேடிக்கையாக) அடே பையா! ஓர் அறையின் நீளம் பத்து அடி: அகலம் எட்டு அடி ஆனால் என்னுடைய வயது என்ன?

பையன்: முப்பத்தாறு சார்.

இன்ஸ்பெக்டர்: (சிரித்துக்கொண்டே)எப்படியடா கண்டு பிடித்தாய்?

பையன்: என் அண்ணா ஓர் அரைப்பைத்தியம்; அவருக்கு வயது பதினெட்டு. அரைப்பைத்தியத்துக்கு பதினெட்டு ஆனால் நீங்கள் ஒரு முழு.......

## அவதூறு

"அவதூறு சொல்பவர்கள் சத்தஞ்செய்யாமல் கடிக்கும் சர்ப்பத்துக்குச் சரியானவர்கள்."

"அவதூறுசொல்பவன் பசாசுக்குப் பரிந்து பேசுகிறான்."

"பிறரைத் தூற்றுகிறவன் பசாசின் வில்லிலிருந்து எய்யப்பட்ட அம்பு."

"சிங்கம்சிங்கத்தைக் கடிக்காது; ஓநாய் ஓநாயைக் கொல்லாது; அவதூறு சொல்பவன் மாத்திரம் மனிதனைக் கடித்து விழுங்கத் தேடுகிறான்."

"அவதூறு பேசுபவர்கள் சருவேசுரனுக்கும், மனிதனுக்கும் அருவருப்புக்குரியவர்கள்."

"அபகரித்த சொத்தை மீண்டும் கொடுத்துவிடலாம்; அபகரித்த கீர்த்தியைக் கொடுப்பதோ அசாத்தியம்."

"பிறரைப்பற்றிப் புகழ்ந்து பேசு; அல்லது ஒன்றுஞ் சொல்லாதே."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரகாசர் அகராதி வெளிவருகிறது எதிர்பாருங்கள்!

இன்றைய உலகிலே, அதுவும் அரசியல் அரங்கிலே, பாஷை அபிமானம் பெரிதும் பிரச்சினை தரும் பொருள். மொழி உரிமைக்காகவே பல்வேறு மக்கள் தனி அரசு நிறுவ வாதாடுகின்றனர். இந்தப் பிரிவினைப் போக்கை மறித்து நிறுத்த அருமருந்தொன்றளித்த அண்ணல் காலஞ்சென்ற நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர் ஆவர். உலகிலுள்ள மொழிகளெல்லாம் ஒரு தனிமொழியினின்றே திரிந்து பிரிந்து போனவையென்று நிரூபித்த அவர் இந்த உண்மையை எல்லோருமறியும்படி அரியதோர் அகராதியும் வெளியிடத் தொடங்கினார்.

ஆனால், இது முடிவடையுமுன் அவர் இறைவனடி சேர நேர்ந்தது. அந்த அரிய பிரபந்தத்தை எந்நாள், எவர்தான் தொடர்ந்து முடிப்பாரென்று ஏங்கி எதிர்பார்த்திருந்தன தமிழகமும், மொழியுலகும்' அந்தக் கனவு நனவாகு நன்னாளும் இதோ கிட்டிவிட்டது, மனம் மகிழ்கின்றோம். சுவாமிகளின் சீடரான கலாநிதி தாவீது அடிகளே அவ்வேலையைத் தொடர முன்வந்தது தமிழ்த்தாய் பெற்ற பெரிய பாக்கியமே. ஆசிரியரின் கட்டளைகளை அனுசரிப்பதோடு நில்லாமல் அயல்நாட்டு அறிஞரின் ஆராய்ச்சிகளையும் ஒருங்கு திரட்டி வடித்துத் தருகின்றார் அடிகள்.

பொன்றாப் புகழொடு தோன்றும் பெரியாரின் வரிசையிலே வைத்துப் போற்றும் பெற்றியர் எங்கள் சுவாமிகள் என்பது அவரை அறிந்தவர்களின் அபிப்பிராயம். பல்கலை வல்லுநரான அவருடைய ஆற்றரும் செயல்களையும், படைப்புகளையும்பற்றி விரித்துவரைய இங்கு அவகாசமில்லை. கலையுலகிலே பலரையும் கவர்ந்த "சொற் பிறப்பு — ஒப்பியல் அகராதி"யின் கதையே இந்த ஏழாம் பகுதியில் வெளிவருகிறது.

வேறு தேவைகளுக்காக விவித மொழிகளைக் கற்க நேர்ந்தபோது அவற்றின் வேற்றுருவிடையே தோற்றம் தரும் ஒற்றுமையை அதிஷ்டவசமாகவே அவதானித்த குருமுனிவர், இவையெலாம் ஒரு தனி ஆதிமொழியினின்றே திரிபு பெற்றிருக்க வேண்டுமென்று முடிபு செய்தார். மொழிகளுள் மறைந்திருந்த ஆதி அடிகளைத் துருவி ஆராய்ந்து, அவற்றின் உருவும் பொருளும் மாறும் முறைகளை ஒழுங்குபடுத்தி, எட்டுக் கட்டளைகளாக வெளியிட்டார். இதன் பயனாக, மொழிகளின் ஆதி அடிகளெல்லாம் தனது தாய்மொழியான தமிழிலேயே பழைய எழிலோடு வெளியே விளங்கக் கண்டு உளம் குளிர்ந்தார். தமிழ் அன்னை மேற்கொண்ட அன்பின் பணியாகவே பெரிய அகராதி வரையவும் முன்வந்தார்.

அதே பண்புடனே அகராதி தொடர்ந்து வெளிவருவது பாராட்டத்தக்கது. காலமாற்றத்துக்கொத்தபடி உருவைக் குறைத்துக் கருவை மட்டும் தருகின்றார் அடிகள். பணமுடையையும், நேரச்சிரமத்தையும் சமாளிக்கும் பொருட்டே தொடர்ச் சொற்களை வேறு அகராதிகளிலே படிக்கவிடுகின்றார். எனினும், பிரதான முதலடிகளும், இரண்டாம் உருவங்களும் கிரமமாக ஆராயப்படுவதிலே சுவாமிகளின் கருத்து நிறைவேறுகிறது நிசம்.

மனத்தெழும் கருத்துக்களை மனிதன் சொல்லின் மூலமே விளங்க வைக்கின்றான். விலங்கோ ஒலியினாலே உணர்ச்சியை மட்டுமே காட்டுகிறது. மனிதனின் பேச்சிலே காணப்படும் அடிப்படை ஒற்றுமை அவன் ஒன்றித்து வாழ வேண்டிய இலட்சியத்தை வற்புறுத்துகிறது. வேற்றுமையாலேற்படும் பிரிவினையை மாற்ற மனிதன் முயற்சியெடுப்பது அவசியமென்று காட்டுகிறது. சர்வதேச சமுதாயத்தை உருவாக்கப் பெரியோர் பிரயாசப்படும் இந்நாட்களில் மொழிகளின் அடிப்படை ஒற்றுமை மனித வர்க்கத்தின் ஒற்றுமைக்கே தேற்றமளிப்பதாகும்.

சொற்களின் கருத்துகள் சடப் பொருட்களிலே தொடங்கிச் சித்துப் பொருட்களிலே முடிவதைக் காண்கின்றோம். இது மனிதனின் வாழ்க்கை ஒழுங்கையே விளக்குகின்றது. மனிதபிறவி, சடமான உடலிலே நடமாடி, முடிவிலே, சுத்த சித்தான கடவுளிலே தனது நித்தியமான முத்தியை அடைய வேண்டும். இந்த ஆழமான உளநூல் உண்மையை விளங்கி வாழ மொழிநூல் ஆராய்ச்சி வழி அளிக்குமானால் அதுவே இவ் அகராதியின் பெரிய பேறாகும்.

தேன் தமிழின் அன்பரெல்லாம் திரண்டுவந்து
தாவீது அடிகள்தொண்டைத் தெரிந்துபோற்றி,
வான்மொழியின் பொன் பொருளைப் புரிந்து
விண்ணில்,
வீட்டைய வீரமொடு விரைவோம்வாரீர்.

"தமிழன்"

# உயிரைக் கொடுத்தே உனை நான் மீட்டேன்

— யோ. சைமன், வவுனியா —

ஆன்மாவும் உடலமும் ஒன்றாயிணைக்கப்பட்ட மனிதன் தனியனாய் இவ்வுலக வாழ்விற்கென்றே வாழ முடியாது. அதிகாரத் திமிரிலே, ஆடம்பரத்திலே கண்ணுக்குத் தோன்றும் காட்சியின்பத்திலே செல்வச் செருக்கிலே சிக்குண்டு பரமன் பதத்தைத் தேடாது வாழும் மனிதனும் தாங்கொணா மனவேதனை வந்துற்றாலே அந்தரங்கத்திலென்கிலும் தெய்வத்தை நினையாது விடுவதில்லை. மண்ணால் ஆக்கப்பட்ட மனிதஉடலம் தெய்வத்தின் சாயலான ஆன்மாவைக் கொண்டுளது. தெய்வ சாயலான ஆன்மாவைத்தேடித்தான் தெய்வம் வந்ததும் இரத்தக் கிரயம் கொடுத்து மீட்டதும். இந்த அன்புக் கிருத்தியத்தைச் செய்து முடித்தவர்தான் பரம்பொருளான கிறிஸ்து.

எமது இரட்சகர் கிறிஸ்து தம்முடைய உதட்டில்மட்டும் அன்பு வைத்திருக்கவில்லை. உள்ளத்திற் கொண்டிருந்தார். செய்கையில் வெளிப்படுத்தினார். சமுதாய வாழ்விலே பகிரங்கமாகத் தம் அன்பெல்லாம் அள்ளிச் சொரிந்தார். சென்ற இடமெல்லாம் அன்பு காட்டினர். தமக்கு அன்பு காட்டும் பக்தர்களுக்கு மட்டுமல்லப் பாவிகளையும் நேசித்தார். தமது பகைவர்களையும் அன்புப் பாசத்தால் அணைத்தார். சத்துராதி யூதாசைச் சபித்துத் தள்ளவில்லை. மறுதலித்த பேதுருவை மனங் கசிந்துருகச் செய்யத் தயங்கவில்லை. வேதனைகள் கொடுத்தோர்க்காகச் செபிக்கப் பின்னிடவில்லை.

அன்புத் தெய்வம் நமக்கு விட்டுச்சென்ற மரண சாதனம் ஒன்றேயொன்று, "நான் உங்களை நேசித்ததுபோல் நீங்களும் ஒருவர் ஒருவரை நேசியுங்கள்" என்பதே. நாம் மற்றோரை நேசிக்க வேண்டின் எம்மிடையே முன்னர் தெய்வ நேசம் வளரவேண்டும். இரண்டையும் ஒன்றைவிட்டு ஒன்றைப் பிடிக்கமுடியாது. அன்பும் நேசமும் உள்ள இடத்திலே தெய்வமுண்டு.

சட்டதிட்டங்களை, ஞாயிறு கடன் நாட்களை நுணுக்கமாய் அனுசரிக்கலாம்; ஒருநேரப் போசன விரதம் மாமிசத் தவிர்ப்பு முதலாம் தவமுயற்சிகளைக் கிரமமாய்க் கடைப்பிடிக்கலாம். அங்கே தெய்வ நேசம், அயலான் நேசம் இரண்டும் காணப்படவில்லையென்றால் மற்றவை யாவும் வெளிவேடமே. அயலானுக்கு அன்புகாட்டுவதென்றால் தெய்வத்தினிமித்தம் தற்பரித்தியாகம் செய்தே அன்புகாட்ட வேண்டும். எனது நாய் எனக்கு அன்பு காட்டுகின்றது ஒருபிடிசாதம் கிடைத்ததற்காக. எஜமானில் அன்பு கொள்ளுகிறான் ஊழியன், தனக்கு வருமானம் கிடைக்குப்படியாக. இவையெல்லாம் இயற்கை அன்பு. ஆனால் சுபாவத்துக்கு மேற்பட்ட அன்பைக்காட்டினாற்றான் உண்மைத் தெய்வநேசம் — அயலான் நேசம் தோன்றும்.

கிறிஸ்து மக்கள்மீது கொண்ட அன்புக்கு இணையானதும் மேலானதும் இவ்வுலகில் இல்லை. எமக்காகத் தம்முயிரையே பலியாக்கினார். எம் அடிமை வாழ்வுக்காகத் தமது உயிரைக் கொடுத்தே எம்மை மீட்டெடுத்தார். கிறிஸ்துவின் திருச்சபை அன்பினால் இணைக்கப்பட்டது. அதன் அருட்கொடைகளும் தேவப் பிரசாதங்களும் அன்பு மயம். வழிநடத்துவோர் வழி வருவோர் யாவரும் அன்பு மக்களே.

மனுக்குலத்தில் மாதவன் கொண்ட அன்பைக் கெடுத்தான் முதல் ஆதாம். அத்தை மீண்டும் பெற்றுக்கொடுத்தார் இரண்டாம் ஆதாமாகிய அன்புத் தெய்வம் கிறிஸ்து. இவர் கன்னியிடம் உற்பவித்துப் பிறந்ததும் அன்பு, அமைந்து வாழ்ந்ததும் அன்பு, போதித்ததும் செய்து வந்ததும் அன்பு. இறுதிவேளையிலும் பேரன்பு காட்டிக் குருசில் உயிர்விட்டார். அன்பின் இருப்பிடமான இருதயமும் ஈட்டி முனங்கினால் குத்தித் திறக்கப்பட்டது. அன்பினால் நிறைந்து வழிந்ததும், மக்களின் உள்ளங்களைக் கவர்ந்ததும், ஈட்டிமுனங்கினால் திறக்கப்பட்டதுமான தேவ இருதயத்தைப் புனித மார்கரீத்மரியம்மாளுக்குக் காட்டி நன்றி மறந்த மனிதனின் பாவத்துக்குப் பரிகாரம் செய்யும்படி கேட்டது.

# "அலையும் நெஞ்சே!"

உள்ளத்தை எங்கோ விட்டு
உலகில் நற்சிந்தை கெட்டு
பள்ளத்தை நாடிச் செல்லும்
வெள்ளம் போல் அலையும் — நெஞ்சே!

செல்வத்தைத் தேடி நின்றாய்
செருக்குடன் வாழுகின்றாய்
தொல்லைகள் அறிந்து கொண்டும்
அல்லல் பட்டலையும் — நெஞ்சே!

பொய்மையில் பொலிவு கண்டாய்
புகலிடம் தேடு கின்றாய்
வாய்மையில் வாழ்வு கண்டாய்
கயமை கொண்டலையும் — நெஞ்சே!

வஞ்சனை சூது கொண்டாய்
வாழ்ந்திட்டாய் பெருமை கண்டாய்
நெஞ்சினை ஓர் நிலைக்குள்
நிலைத்திடா தலையும் — நெஞ்சே!

தூயவன் பரமன் வாழ்வை
துயரினில் தோய்ந்தான் கண்டாய்
ஆயவன் சிலுவைப் பாதை
அறியாது அலையும் — நெஞ்சே!

குருசினை யணைத்துக் கட்டி
குமரன்தன் னுயிரை விட்டான்
ஒருதுளி கண்ணீர் விட்டுன்
பாவத்தை யுணர்வாய் — நெஞ்சே!

— "முல்லைநாதன்"

# இக்காலத்தில் சீவிப்பதற்கு நாம் அதிர்ஷ்டசாலிகளே

கிறிஸ்தவசீவியசமுதாய இயக்கத்தின் தலைவராகிய வண. ஜோர்ஜ் பி. பெரேரு சுவாமியார் சென்றவாரம் கொழும்பு கொட்டாஞ்சேனை நல்லாயர் மடத்தில் அப்பகுதிக் கிறிஸ்தவ சமுதாய இயக்கத்தினரின் கூட்டத்தில் பேசுகையில் கூறியதாவது: எமக்கு இக்காலத்தில் சீவிக்கக் கிடைத்தது எமது அதிர்ஷ்டமே. எமது முன்னோர் கண்டிராத பலவற்றை நாம் எமது காலத்தில் கண்டிருக்கின்றோம். திருச்சபை புத்துயிர் கொண்டு புதிய புதிய முறைகளைக் கடைப்பிடித்து வருகின்றது. நாம் இப்போது நல்லாய்ப் பழகிவிட்ட இப்புது முறைகளை எமது முன்னோர் கனவிலும் எண்ணியிருக்க மாட்டார்கள். உதாரணமாக, அவர் பின்னோர் [illegible] தாய்மொழியில் திருப்பலி ஒப்புக் கொடுத்தலையும், கிறிஸ்தவ சபைகளிடையே காணும் ஒற்றுமையையும் குறிப்பிட்டுப்பேசினார். இம்மாற்றங்களுக்கு ஏற்பக் கிறிஸ்தவ சமுதாயம் தமது முறைகளை ஒழுங்குசெய்ய வேண்டுமென்பதே அவர் கூறியவற்றின் சாரமாகும்.

# லூர்து திருப்பதியின் புதிய ஆயர்

1947-ம் ஆண்டு தொடக்கமாக லூர்து புண்ணிய ஸ்தலத்தின் மேற்றிராணியாராகக் கடமையாற்றிய மொஞ்சிஞோர் பியறே தேஜஸ் அடிகளார் தமது 75-வது வயது நிறைவுற்றதன் காரணமாகத் தமது கடமைகளிலிருந்து ஓய்வுபெறுகின்றார். 50 வருடங்களுக்குமுன் குருப்பட்டம்பெற்று, 1940-ம் ஆண்டு மொன்ராமான் பிரதேச மேற்றிராணியாராகி 1947-இல் லூர்துபதிக்கு ஆயராக நியமனம்பெற்றார். அவரின் இடமாக ஹென்றி, கிளெமென்ற் டொன்ற்ஸ் அடிகளார் லூர்துபதி ஆயராகின்றார். இவர் 1936-ம் ஆண்டு குருப்பட்டம்பெற்று 1963 தொடக்கமாய் பிரான்சுதேசத்தில் ருல் பிரதேச ஆயராகக் கடமையாற்றி வந்தவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவழிபாட்டின் நாள்காட்டி

### 1970 — சித்திரை மாதம்

| | | | |
|---|---|---|---|
| 5 | ஞாயிறு | பாஸ்கா 2-ம் ஞாயிறு | [வெ] |
| 6 | திங்கள் | மங்கள வார்த்தை | [வெ] |
| 7 | செவ்வாய் | தினப்பூசை | [வெ] |
| 8 | புதன் | ,, | [வெ] |
| 9 | வியாழன் | ,, | [வெ] |
| 10 | வெள்ளி | ,, | [வெ] |
| 11 | சனி | புனித சிங்கராயர் | [வெ] |

சத்தியவேத பாதுகாவலன்

# கிறிஸ்துவின் வெற்றி

உயிர்த்த ஆண்டவர் பாவத்தையும், பசாசையும், மரணத்தையும் வென்ற வெற்றிவீரராய்த் தமது வெற்றிப் பதாகையை ஏந்தியபடி !எம்மை அழைக்கிறார்— "என் பின்னே வாருங்கள்."

புனித சின்னப்பர் ஆண்டவரது உயிர்ப்பைத் தம் மனக்கண்ணில் கண்டு தமது சீடர்களை நோக்கி வற்புறுத்திக் கூறுவதாவது: 'நீங்கள் கிறிஸ்துவுடன் கூட' உயிர்த்தெழுந்ததுண்டானால், கிறிஸ்து தேவனுடைய வலது பக்கத்தில் வீற்றிருக்கும் இடத்திலுள்ள மேலானவைகளைத் தேடுங்கள்; பூமியிலுள்ளவைகளையல்ல, மேலானவைகளையே நாடுங்கள்."

நீங்களும் கிறிஸ்துவுடன் உயிர்த்ததுண்டானல்... கிறிஸ்துநாதர் உண்மையாகவே தம் தெய்வீக வல்லமையால் கல்லறையினின்று உயிர்த்தெழுந்தார் இப்போது அவரது உடல் மகிமைமிக்கதாய், அழியாத் தன்மையுடையதாய், தெய்வீக அழகுடையதாய் விளங்குகிறது. இருநாட்களின்முன் வாதிக்கப்பட்டுப் படுகாயப்படுத்தப்பட்ட உடலில் இன்று உயிரோட்டம்; ஒவ்வொரு தசையும் நரம்பும் ஒரு புதிய வலிமைபெற்றுத் திகழ்கின்றது. மனிதரின் நன்றியீனத்தால் நொருங்கித் துயரக்கடலில் மூழ்கியிருந்த அவரது ஆன்மா இன்று தேவனது பிரத்தியட்ச தரிசனத்தில் அமைதியிற் திளைக்கின்றது பிலாத்துவினல் சுட்டிக்காட்டப்பட்ட மனிதர் இப்போது மகிமையின் மன்னனாக, கிறிஸ்து இராசாவாக வீற்றிருக்கின்றார்.

"நீங்களும் கிறிஸ்துவுடன் உயிர்த்ததுண்டானல்......" பாவமரணத்திலிருந்து மீண்டுவிட்டீர்களா? துர்ப்பழக்கங்கள் என்னும் பரிவட்டத்துணியை அகற்றிவிட்டீர்களா? தேவதிருவருள் என்னும் ஒளிமிக்க வெண்ணுடையைப் புனைந்து கொண்டீர்களா? அப்போதுதான் கிறிஸ்துவின் உடல் உருக்குலைந்துபோனதுபோல் பாவத்தழும்பால் உருக்குலைந்துபோன ஆத்துமம் மீண்டும் தன் அழகைப்பெறும் இறைவனிடமிருந்து துண்டிக்கப்பட்டதனல் துயரத்திலாழ்ந்திருந்த ஆத்துமம் அமைதிபெற்று, அவரது அன்பிற் திளைக்கும். கிறிஸ்துநாதரின் உடலில் ஒன்றித்துவிட்ட நாம் அவரது வெற்றியில் பங்குகொள்வோம்.

# கல்வி இலாகாவின் மர்ம மௌனம்

இவ்வருட பெரியவாரத்தில் கத்தோலிக்கபிள்ளைகள் பெரியவியாழன், பெரியசனி ஆகியநாட்களில் பள்ளிக்கூடம் செல்லவேண்டிய நிலைமையைத் தவிர்க்குமாறு கொழும்பு அதிமேற்றிராசனத் துணைஆயர் ஒஸ்வல்ட் கோமிஸ் அடிகளார் நமது நாட்டுகல்வி இலாகாவுடன் எடுத்துக்கொண்ட பிரயத்தனங்கள் பயன்கொடுக்காது விட்டது துக்கத்துக்குரியதே. பெரியவாரத்துக்கு ஒருமாசத்துக்கு முதலே கல்வி இலாகாவுக்கு இதுவிஷயமாக ஆயர்அவர்கள் எழுதியிருந்தும் அக்கடிதம் கிடைத்தது என்றுகுதல் ஒருவார்த்தை தன்னும் கல்விஇலாகா எழுதாதுவிட்டது இத்தகைய விஷயங்களில் கத்தோலிக்கரை இலாகா வேண்டாவெறுப்புடன் நடத்திவருகின்றது என்பதைப் புலப்படுகின்றதென கோமிஸ் அடிகளார் துக்கத்துடன் சென்றவார மெசெஞ்சர் பத்திரிகைக்கு அளித்த பேட்டியிற் குறிப்பிட்டுள்ளார். மேலும் பகிரங்க பரீட்சைக்குரிய திகதிகளைக் குறித்தலிலும் இவ்வித வேண்டா வெறுப்புக் குணத்தை இலாகா காட்டிவருவதையும் அடிகளார் குறிப்பிட்டார். உதாரணமாக சென்ற பொதுத்தராதர சாதாரண பத்திரப் பரீட்சைக்கு மார்கழிமாதம் 24-ம், 26-ம் திகதிகளைக் குறித்ததும் கத்தோலிக்கருடைய வசதிகளைப்பற்றிச் சிந்தியாதநிலைமையை எடுத்துக் காட்டுகின்றதென அவர் சுட்டிக்காட்டினர்.

# உயிர்ப்பு ஞாயிறுக்குப் பின் 1-ம் ஞாயிறு

**முன்னுரை:** இன்று உயிர்ப்புத் திருவிழாவுக்குப் பின்வரும் முதலாம் ஞாயிறு. இஞ்ஞாயிறு "வெண்ணிற ஆடை" ஞாயிறு என்றும் அழைக்கப்படுகின்றது. ஆதித் திருச்சபையிலே மக்கள் திருமுழுக்கு (ஞானஸ்நானத்து)க்குத் தயார் செய்யப்பெற்றனர். பெரிய சனியன்று, பாஸ்குத் திருவிழிப்பின் போது திருமுழுக்காட்டப்பட்டனர். அன்று அவர்களுக்கு ஒரு வெண்ணிற ஆடை அணியத்தரப்பட்டது. ஒரு முழு வாரத்திற்கு அவ்வுடையை அணிந்து கொள்ளுவார்கள். அது அவர்கள் அன்று பெற்ற அகத் தூய்மையை— அருள் நிலையைப் — பெருங்கொடையை வெளிக்காட்டிற்று. திருமுழுக்கினுல் நமக்குக் கிடைதத அருட்கொடையை— புதுப்பிறப்பை எண்ணி மகிழ்ந்து, நன்றி கூறும் தினமாக இன்று தினம் அமைய வேண்டும். எனவே, அன்று குரு கூறிய அவ்வார்த்தைகளை இன்று நினைவு கூருவோம். "தூய வெண்ணிற ஆடையைப் பெற்றுக் கொள். நித்திய சீவியத்தை அடையும் பொருட்டு, இதை மாசுபடாமல் நம் ஆண்டவராகிய யேசுக் கிறிஸ்துநாதருடைய நீதி ஆசனத்திற்குமுன் கொண்டு சேர்ப்பாயாக." இவ்வருளுயிரைக் காக்கவும், ஊக்கி வளர்க்கவும் இறையுதவியை இத் திருப்பலியில் இரந்து வேண்டுவோமாக.

**சபை மன்ருட்டு:** கிறிஸ்துவின் உயிர்ப்புத் திருவிழாவைக் கொண்டாடி மகிழ்ந்தோம். இந்நாட்களில் நம்மில் புதுப்பிக்கப்பட்ட இறைவாழ்வை — அருள் உயிரை, நம் அன்றாட வாழ்வு தெளிவுபடுத்துவதாக.

**நிருபம்:** (1 அரு. 5:4—10) இறைமக்கள் தம் விசுவாசத்தினுல் உலகை வென்று, கிறிஸ்துவின் தெய்வீகத்திற்குச் சாட்சி கூறி, நித்திய வாழ்வை அடைந்து கொள்கின்றனர் எனப் புனித அருளப்பர் கூறுகின்றார்.

**நற்செய்தி:** (அரு. 20:19—31) யேசு தம் சீடருக்கு நம் பாவங்களை மன்னிக்க அதிகாரம் அளிக்கின்றார். உயிர்த்த யேசுவில் நமக்குள்ள விசுவாசத்தைப் புனித தோமையாரின் நிகழ்ச்சி உறுதிப்படுத்துகின்றது.

**காணிக்கை மன்ருட்டு:** மகிழ்ச்சி கொள்ளும் திருச்சபையின் காணிக்கைகளை இறைவன் ஏற்றுக்கொள்வாராக. அவை நித்திய வாழ்வை நமக்குப் பெற்றுத்தருவதாக.

**நன்றிக் கீதம்:** இறைவன் கிறிஸ்துவின் மரணத்தினுல் நம் மரணத்தை வென்றார். அவரது உயிர்ப்பினுல் நமக்கு நித்திய வாழ்வை மீண்டும் பெற்றுத் தந்தார். எனவே, வானதூதர் புனிதர்களுடனும், அனைத்துலக இறைமக்களுடனும் ஒன்று கூடி, இறைவனைப் போற்றிப் புகழ்ந்து நன்றி கூறுவோம்.

**நன்றி மன்ருட்டு:** இப்போது நாம் நிறைவேற்றிய இத்திருப்பலி, நாம் பெற்றுள்ள அருள் உயிரை மென்மேலும் அதிகரித்து வளர்க்க உதவுவதாக.

— அ. மருசிலின்

## குருத்துவாபிஷேகம்

சித்திரை 6-ந்தேதி திங்கட்கிழமை காலை 7-30மணிக்கு யாழ்ப்பாணம் ஆசனக்கோவிலில் துணை ஆயர் வந். அன்ரனி ஆண்டகை அவர்கள் பின்வரும் மூன்று பிறதர் மாருக்கு குருத்துவாபிஷேகம் அளித்தருளுவார்.

ஊர்காவற்றுறையைச் சேர்ந்தசங். எஸ். எல். மரியநாயகம், S. J., பெரியவிளானைச் சேர்ந்த சங். ஜே. ஜே. எட்வேட், O. M. I., உடுவிலைச் சேர்ந்த சங். ஜேம்ஸ் பத்திநாதர்.

விசுவாசிகள் இத்திருச்சடங்கில் பங்குபற்றிப் புதிய குருப்பிரசாதிகளுக்காக மன்ருடிக்கொள்ளும்படி தயவாக வேண்டப்படுகின்றனர்.

## யேசுபரன்

உலகின் மீட்பரே யேசுபரன் — எங்கள்
உயிரின் மீட்பரே யேசுபரன்
இலகும் நீதியே யேசுபரன் — அன்பை
இறைக்கும் ஜோதியே யேசுபரன்.

* * *

வழியும் வாழ்வும் யேசுபரன் — எம்மை
வளர்க்கும் முகிலும் யேசுபரன்
பொழியும் கருணை யேசுபரன் — தங்கம்
பொங்கும் நிலவும் யேசுபரன்.

* * *

ஏழ்மையின் பொன்மலர் யேசுபரன் — என்றும்
ஏழைகள் தோழனும் யேசுபரன்
ஊழியம் செய்பவர் யேசுபரன் — என்றும்
உற்ற துணைப்பலம் யேசுபரன்.

* * *

மண்ணவர் யாவர்க்கும் சொந்தமவர் — பாவ
மாசற்ற நெஞ்சினர் பந்தமவர்
விண்ணுக்கும் மண்ணுக்கும் பாலமவர் — உயிர்
வீழ்த்தும் அகந்தைக்குக் காலனவர்.

* * *

சத்தியத்தின் பெயர் யேசுபரன் — நிறை
சாந்தியின் பேருரு யேசுபரன்
முத்தியின் வாசலும் யேசுபரன் — கன்னி
முத்தமிழ்க் காவியம் யேசுபரன்.

* * *

பாரின் விடுதலை மாட்சிபெறப் — பெரும்
பாவஞ் சுமந்தவர் யேசுபரன்
கோர மரணத்தின் கல்லறையை — வெற்றி
கொண்டெழுந்த சுதன் யேசுபரன்.

யாழ் — "ஜெயம்"

## ஒற்றுமைக்காக ஒன்றித்துச் செபித்தனர்

இரு வாரங்களுக்கு முன் அங்கிளிக்கன்சபைத் தலைவர் டக்டர் ரும்சே நியூயோர்க் நகரம் சென்றிருந்தபோது, அந்நகர அதிமேற்றிராணியாராகிய கருதினுல் குக் அடிகளாருடன் புனித பத்திரிசியார் மகாதேவாலயத்தில் ஒரு விசேஷ பிரார்த்தனையில் பங்குபெற்று பாப்பரசரின் விசேஷ நோக்கமாகிய உலக சமாதானத்துக்காகவும், கிறிஸ்துவ சபைகளின் ஒற்றுமைக்காகவும் பிரார்த்தித்துக் கொண்டனர். அவர் அங்கு இருந்த நாட்களில், பெல்ஜியதேச கருதினுல் சுயென்ஸ் அடிகளாருடன் சேர்ந்து அந்நாட்டு எப்பிஸ்கோப்பன் கிறிஸ்தவசபை மேற்றிராணிமார்களுக்கு உபந்நியாசஞ்செய்துவந்தனர். கருதினுல் சுயென்ஸ் அடிகளாருக்கும் டக்டர் ரும்சே அடிகளாருக்கும் நியூயோர்க்நகர யேசுசபை மறைக்கலைஞர் மன்றத்தின் விசேஷ கௌரவப் பட்டங்கள் அளித்தனர்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், 20 இலக்க 5ஆம் குறுக்குத்தெருவில் வதியும் திரு. நீக்கிலஸ் ஜேம்ஸ் அவர்களால் உரிமையாளருக்காக அர்ச். சூசைமாமுனிவர் அச்சகத்திற் 1970 ஆம் ஆ சித்திரைமீ ஆம்4 உ சனிக்கிழமை அச்சிடப்பெற்று வெளியிடப்பட்டது. தந்தி : "கதலிக் பிறஸ்" யாழ்ப்பாணம். தொலைபேசி : 300 தாபிதம் : 1876.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org